விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 27 | துல்ஹஜ்ஜா 4 | இதழ் 22
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 09-06-1989

University of Jaffna Sri Lanka RECEIVED 1989-06-9 Periodicals Division

## "ராஜீவிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறோம்!"

### அமைச்சர் ரஞ்சன் தகவல்

(கொழும்பு)

இந்திய அமைதிப்படை விலகல் தொடர்பாக பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடமிருந்து அதிகாரபூர்வமான பதிலை இலங்கை அரசு எதிர்பார்த்திருப்பதாக வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இலங்கை விடுத்த காலக்கெடுவுக்குள் படை திருப்பி அழைக்கப்பட மாட்டாது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். ஜப்பான் பயணம்

(கொழும்பு)

சர்வதேச மாநாடொன்றில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன நேற்று ஜப்பான் பயணமானார்.

# வட-கிழக்கு மாகாண இணைப்பு:

# வாக்கெடுப்பு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைப்பது தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் அடுத்த மாதம் நடைபெற இருந்த சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திவைப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 'ஈழநாடு'க்கு கிடைத்த நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஏற்கனவே தீர்மானித்தபடி சர்வசன வாக்கெடுப்பை அடுத்த மாத முற்பகுதியில் நடத்தவேண்டாம் என்று கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்-முஸ்லிம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்தே அரசாங்கம் சர்வசன வாக்கெடுப்புக்கான திகதியை ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இந்த சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா ஓரிரு தினங்களில் அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார் என வெளிநாட்டமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன நேற்று முன்தின இரவு தெரிவித்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களில் ஒரு பகுதியினரும் இந்த சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் திரு. விஜயரத்ன அமைச்சரவை முடிவுகளை அறிவித்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்திருந்தார்.

## எம்.ஸி.க்குசபையில் புகழாரம்

(நமது பாராளுமன்ற நிருபர்)

''ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டவராகக் காலஞ்சென்ற எம். ஸி. சுப்பிரமணியம் விளங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் உறுப்பினராக அவர் இருந்தபோதிலும், கட்சி அடிப்படையில் கருத்து வேற்றுமைகள் நம்மிடம் இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை, சாதி பேத ஒழிப்பு விஷயங்களில் சட்டங்களைக் கொண்டுவருவதிலும், அதனை நடைமுறைப்படுத்திச் செயற்படுத்துவதிலும் நாம் ஒற்றுமைப்பட்டிருந்தோம்.''

இவ்வாறு, காலஞ்சென்ற எம். ஸி. சுப்பிரமணியத்தின் நினைவாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையின் மீது பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## நகரில் கேட்ட துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக நேற்றுக்காலை திடீரென துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதையடுத்து அங்கு நின்ற மக்கள் சிதறி ஓடினர். சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததென்று பின்னர் தெரியவந்தது. (கு)

## முஸ்லிம்கள் அமைதி பேண

### காங்கிரஸ் கோரிக்கை

[கொழும்பு]

''முஸ்லிம்கள் நாடு முழுவதிலும் அமைதியைப் பேணி, சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் பொலிஸாருக்கும் மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இன்று வெள்ளிக்கிழமை பகல் தொழுகையின் பின்னர் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாமல் அமைதியைப் பேணவேண்டும்.''

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டுள்ள முஸ்லிம் மக்களின் உணர்ச்சிகளைப் பயன்படுத்தி, முஸ்லிம் மக்களுக்கும், பொலிஸாருக்கும் மோதலை ஏற்படுத்தச் சில சுயநலப் போக்குடையவர்கள் முயன்று வருகின்றனர். நிலைமையை உணர்ந்து சகல இன மக்களுடனும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்றும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

## பஸ் சேவை வழமைக்குத் திரும்பியது

(கொழும்புத்துறை)

கடந்ததிங்கட்கிழமை மாலையிலிருந்து தடைப்பட்டிருந்த பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ் போக்குவரத்துக்கள் நேற்று நண்பகலின் பின்னர் மீண்டும் வழமைக்கு வந்துள்ளன.

புத்தூர் தாக்குதல் சம்பவங்களினால் புத்தூர்ப் பாதை ஊடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்தன. இதனால் பருத்தித்துறையிலிருந்து போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

## வ. பி. போ. சபை, மினி பஸ் ஒருங்கிணைந்த சேவை!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், மினி பஸ் சங்கமும் ஒன்றிணைந்து, தமது சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

இருசேவைகளையும் பொதுவான நேர ஒழுங்கில் நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இருசேவைகளுக்குமான தரிப்பிடங்கள் வெவ்வேறான இடங்களில் இருந்தாலும் பிரயாணிகளை யாழ். பஸ் நிலையத்தில் வைத்து ஏற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது.

## பாடசாலைகள் திங்கட்கிழமை திறக்கப்படுமா?

### இன்று முக்கிய மாநாடு

(கொழும்பு)

''நாட்டில் நிலைமைகள் சாதகமாயிருக்கும் பட்சத்தில் திங்கட்கிழமை முதல் மீண்டும் சகல பாடசாலைகளையும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கல்வி அமைச்சர் திரு. டபிள்யூ. லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சு இன்று மகாநாடொன்றை நடத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மகாநாட்டில் நாட்டின் பலபகுதிகளிலுமிருந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.

## மட்டக்களப்பு மாவட்டம்: நிவாரணப் பணம் உடன் வழங்க ராஜாங்க அமைச்சர் உத்தரவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 4 ஆயிரம் ரூபா நிவாரணப் பணத்தைப் பெறாதவர்களுக்கு உடன் அப்பணத்தை வழங்குமாறு புனர்வாழ்வு, ராஜாங்க அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா, மட்டக்களப்பு அரசாங்க அதிபரைப் பணித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு, அதிகாரிகளையும், பாதிக்கப்பட்ட மக்களையும் சந்திக்கும்பொருட்டு மட்டக்களப்பு விஜயஞ்செய்த திரு. வின்சன்ட் பெரேரா, மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. கே. செல்வராத்தினம் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வாகனங்களுக்குப் பாஸ்- இவர்களும் ஈடுபடுவர்

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்குப் பாஸ் வழங்கும் பணியில் இந்திய அமைதிப்படையுடன் சேர்ந்து குடிமக்கள் தொண்டர் படையும், இலங்கைப் பொலிஸாரும் ஈடுபடவுள்ளதாக அறியப்படுகிறது.

## கடந்த மூன்று ஆண்டுகளில் புகையிரதப் பகுதிக்கு 116 கோடி ரூபா நஷ்டம்!

(ஸி. துவான் நஸீர்)

''கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இலங்கை புகையிரதப்பகுதி அடைந்த மொத்த நஷ்டம் ஆயிரத்து நூற்று பதினைந்து கோடியே 90 லட்சம் ரூபாவாகும். 1988ல் மட்டும் நான்கு பயணிகள் ரயில் வண்டிகளும், இரண்டு சரக்கு ரயில்களும், நான்கு ரயில் நிலையங்களும் முற்றாக நாசமாக்கப்பட்டன. [illegible] வண்டிகளும், தடம் புரளச் செய்யப்பட்டன''

இத்தகவல்கள், இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட 1988ம் ஆண்டறிக்கையில் [illegible] அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

[7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2752)

ஆங்கில தட்டெழுத்தாளர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு. நேரில் தொடர்பு கொள்ளவும் "சுப்ப கனன்" கொப்பி சேவை, 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (சி-2908)

பழைய பித்தளை, வெண்கலம், செம்பு கூடிய விலைக்கு வாங்கப்படும். தொடர்புசிவன் மாளிகை லிமிட்டெட், 166, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 2920)

கணக்காளர் நிறுவனமொன்றிற்கு தொழில் பயிலுனர் (Audit Traniee)தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி 2923 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 2923)

### விற்பனைக்கு

Sony Sterio Deck Set, Yamaha Deck, Akai Deck, Pioneer Equilizer, Tamil Audio Records உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரையில்ஸ், திருநெல்வேலி. (சி 2913)

அலுமினிய வீணைக்குடம் (சுரக்காய்) விற்பனைக்குண்டு. தொடர்பு, சிவன் மாளிகை லிமிட்டெட்: 166, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி 2919)

சண்டிலிப்பாயில் சங்கானை மல்லாகம் றோட்டில் மரக்காலைக்கு முன்னொழுங்கையில் 4வதுகாணியும்[பழையமதில்], 1½ பரப்பு தென்னங்காணியும் அதோடு 10 பரப்பு பனங்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ம. கௌரி "கல்வளைவில்லா" [பிள்ளையார் கோயில் முன்] கல்வளை, சண்டிலிப்பாய். (சி 2918)

### கல்வி

5ம் ஆண்டு புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 18-06-89 ஞாயிறு 3-00 மணிக்கு நடைபெறும் மேற்படி பரீட்சை சம்பந்தமான வினாவிடை வகுப்பு சனி, ஞாயிறு நாட்களில் 10-30 மணிக்கும் புதன் 3-00 மணிக்கும் நடைபெறவுள்ளது. ஆரம்பம்10-06-89 சனி 10-30. புதிய கல்வி நிலையம், செங்காதான் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (சி 2924)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# சுங்கப் பொருட்கள் ஒழுங்கமைப்பு கருத்தரங்கு

(கொழும்பு)

சுங்கப் பொருட்கள் ஒழுங்கு முறையை அறிமுகம் செய்யும் கருத்தரங்கு சுங்க திணைக்கள பயிற்சி நிலையத்தில் கடந்த மாதம் 27-ம் திகதி நடைபெற்றது.

இத்திணைக்கள கைமாற்று வர்த்தகப் பகுதியைச் சேர்ந்த சுமார் நூறு பேர் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். இதற்கு திரு. என். ஜே. ஜெயராஜா தலைமை வகித்தார்.

இப்புதிய முறை தொடர்பாக 'பிரசல்ஸில்' சுங்க கூட்டுறவு சபையில் பயிற்சிபெற்ற சுங்கப் பணிப்பாளர்கள் திரு. ஏ. டி. எம். ஜெகநாதன், திரு. கே. பாலேந்திரா மேற்படி கருத்தரங்கில் அறிமுக உரையாற்றினர்.

## யாழ்- வைத்தியசாலை கட்டட வேலைக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையின் ஐந்துமாடிக்கட்டட வேலைகளைத் தொடர்ந்து செய்து அதனை முடிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதியிலிருந்து மேற்படி கட்டடத்துக்கு நிதிஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். போதனு வைத்தியசாலைக்கான ஐந்துமாடிக்கட்டடம் 1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை இரண்டு மாடிகளே ஓரளவு முடிந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## நஷ்டஈடு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கோமாரி நோய்கண்டமாடுகளை, கொன்றொழிப்பவர்களுக்கு அவற்றின் ஒரு கிலோகிறும் 'உயிர் நிறைக்கு' ஆறு ரூபா ஐம்பது சதவீதம் நஷ்டஈடு வழங்கப்படுமென வடபிராந்திய கால்நடைஉற்பத்தி சுகாதாரத்திணைக்களம் அறிவித்துள்ளது.

கோமாரி நோய்கண்டமாடு ஆடுகளுக்கு தடுப்பூசிபோடுவதால் மட்டும் அந்நோயைக் கட்டுப்படுத்த முடியாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்துமகளிர்கல்லூரி கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளையும், நாளை மறுதினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த மெய்வல்லுநர் போட்டி விதிமுறைகள் பற்றியகருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணங்களினுல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

## சனசமூகநிலைய கலையரங்கம்

(சாவகச்சேரி)

கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலையத்தினுல் எழுபத்தையாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய கலையரங்கின் திறப்பு விழா எதிர்வரும் 14-ம் திகதி நடைபெறவுள்ளது.

கலையரங்கை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. க. சிவஞானம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் கைதடி நவீல்ட் பாடசாலைப் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## சுவாமியை சந்திக்கலாம்!!



ரிஷிகேசவன் ஜீ. ஜீ. லட்சுமி நாராயண சுவாமிஜி சுகவீனம் காரணமாக வட்டுக்கோட்டை பழைய டிஸ்பென்சரி வளவு இல்லத்துக்கு இடம் மாறியுள்ளார்கள். சுவாமியின் அன்பர்கள் புதிய முகவரியில் சந்திக்குமாறு வேண்டுகிறோம்.

பழைய டிஸ்பென்சரி வளவு
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(சி 2814)

## புதிய அதிபர்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் அதிபராக அங்கு கடமையாற்றிய துணைஅதிபர் திரு. எஸ். நாகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வித்தியாலயத்தின் அதிபராக விருந்த திரு. இ. கணேசன் மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே திரு. நாகராசா அதிபராக நியமிக்கப்பட்டார்.

## நீரின்றிக் கஷ்டம்

(புங்குடுதீவு)

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலக வளவில் அமைந்திருக்கும் கிணறு துப்புரவு செய்யாமலிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனுல் அங்குள்ள ஊழியர்கள் அக்கிணற்றிலிருந்து நீரைபாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## பஸ் சேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, துன்னலை பாதைகளில் சேவையாற்றும் இல 764 [illegible] சேவையில் ஈடுபட [illegible]

## தரமான பனங்கட்டி

தரமான பனங்கட்டிகள் பல்வேறு அளவுகளில் பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்தில் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

விலாசம்:

சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ 266)

## எமது புதிய வெளியீடுகள்

(1) நிழல்கள் ரவி, ராதிகா, பானுச்சந்தர்
காவல் பூனைகள்
(ஒறிஜினல்)

(2) ஜெமினி, சரோஜாதேவி, தங்கவேலு
கல்யாணப் பரிசு
(ஒறிஜினல்)

(3) American Ninja 3

(4) Dragon's Forever

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-271)

## A/L விஞ்ஞான மாணவர்கட்கு வெப்ப இரசாயனம்

ஆரம்பம்: 10-06-89
Sat & Sun. 5p. m. – 6 p. m.
ஆசிரியர் Mr. நாகரட்னம் B. Sc
மணல்தரை லேன், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(பி 268)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



சாள்ஸ் அன்ரன் சபாபதி
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

தாயின் மடியில்: 21-5-1929

ஆண்டவன் அடியில்: 9-6-1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

211/1, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், நண்பர்கள்.
(சி 2922)

## ஓராண்டு நினைவஞ்சலி



கைதடி தெற்கு திருமதி தங்கம்மா பத்மநாதன்

தோற்றம்: 5-11-24 மறைவு: 21-5-88
திதி: 9-6-89

எங்களைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களைவிட்டு மாறவில்லை உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
பொ. பத்மநாதனும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தானுர் வளவு,
கைதடி.
(சி 2921)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆப்கானிஸ்தானில்
# 48 மணி நேர யுத்தத்தில்
# எழுநூறு பேர் பலி

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் கடந்த 48 மணி நேரத்தில் அரச துருப்புகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் இடம்பெற்ற கடும் மோதலில் எழுநூறு பேர் வரையில் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.**

கிழக்கு நகரமான ஜலலாபாத், கோஸ்ரி பகுதிகளில் கிளர்ச்சிக்காரர்களின் நிலைகள் மீது தாம் மேற்கொண்ட பீரங்கி, விமான தாக்குதலில் 500 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக ஆப்கான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இராணுவத்தினர் மேற்கொண்ட கடும் தாக்குதல்களை தாம்முறியடித்துள்ளதாகவும் தமது எதிர்த் தாக்குதலில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கிளர்ச்சியாளர்கள்தெரிவித்துள்ளனர்.

ஏஜென்சி செய்திகளின்படி கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்களாக இருக்கக்கூடுமெனக் கூறப்படுகிறது. இதே வேளை தற்போதும் இப்பகுதிகளில் கடும் யுத்தம் இடம்பெற்று வருகிறது.

இதற்கிடையில் ஆப்கான் அதிபர் ஜனுப் நஜிபுல்லா உடனடியாக பதவி விலக வேண்டுமென்று அமெரிக்காவும், பாகிஸ்தானும் விடுத்த கோரிக்கையை ஆப்கான்அரசு வன்மையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஆப்கான் உள்விவகாரங்களில் தலையிட எந்த நாட்டுக்கும் உரிமையில்லையென்றும் இதன் விளைவுகள் பாரதூரமாயிருக்குமென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

---

## பெண் என்றால் பெரும் கவலை

(லண்டன்)

சீனாவில் ஆணுக்குச் சமமாகப் பெண்கள் மதிக்கப்படுவதில்லை. மேற்படிப்பு, வேலைவாய்ப்பு மற்றும் பல விடயங்களில் பெண்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஒரு கம்பெனியில் ஆட்குறைப்புச் செய்யவேண்டிய நிலைவந்தால் முதலில் வெளியேற்றப்படுபவர்கள் பெண்களே. அதேபோல கடைசியாக வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களும் பெண்களே.

காரணம் ஆறுமாதம் தாய்மைப் பேறுக்கான விடுமுறையும், வியாதியுள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்கு விடுமுறையும் வழங்கப்படவேண்டும் என்பதே. பெண்கள் வேலைக்குச் சேரும்போது ஆண்களை விட அதிக தகுதி எதிர்பார்க்கப்படுகிறது நல்லகாலம் இந் நிலை இங்கில்லை. மேற்படி தகவல்களை 'பெண்கள் செய்தி, என்னும் சீனசஞ்சிகை வெளியிட்டுள்ளது,

## பகை நாடுகள் பட்டியலில் தவறு

பகை நாடுகள் என்ற பட்டியல் ஒன்றை அண்மையில் அமெரிக்கா தயாரித்து வெளியிட்டது. தயாரிப்பில் சிறு தவறொன்று ஏற்பட்டதனால் அது மீண்டும் ஓர் பட்டியலை தயாரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தவறுக்கு காரணம் அந்தப் பட்டியலில் தவறுதலாக சீனாவின் பெயர் இடம் பெறவில்லை. தற்போது சீனா அந்தப் பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை அமெக்கப் பாதுகாப்பு அமைச்சகம் தயாரித்துள்ளது. இந்தப் பட்டியலிலுள்ள ஏனைய சில முக்கிய நாடுகள் சோவியத்யூனியன், நிக்கரகுவா, கியூபா, வடவியட்நாம்.

## மலிவு விலையில் புதிய கார்கள்

உலக நாடுகளில் உற்பத்தியான சமீபத்திய நவீன மாடல் கார் 33 சதவீதம் அல்லது நாற்பது சதவீதம் தள்ளுபடி விலைக்கு வேண்டுமா? அப்படியானால் பராகுவே நாட்டிற்கு செல்லுங்கள். திருடப்பட்ட கார்களின் சொர்க்கம் இங்குதான் உள்ளது. இங்குள்ள சுமார் ஒன்றரை லட்சம் கார்களில் 25 சதவீதமே சட்டரீதியாக வாங்கப்பட்டவை.

சுமார் 70,000 கார்கள் ஆர்ஜன்ரீனா, பிறேஸிலிலிருந்து திருடப்பட்டவை. சுமார் 40 லட்சம் மக்கள் வாழும் தென்அமெரிக்க நாடான பராகுவேயில் கார் தொழிற்சாலை எதுவும் இல்லை. பிறேஸில், ஆர்ஜன்ரீனா கார்களே இங்கு மலிவு விலையில் விற்பனையாகின்றன.

---

## பாகிஸ்தானுக்கு
# அச்சுறுத்தல்கள் இருக்கும் வரை அமெரிக்க உதவிகள் தொடரும்
### புதிதாக 60 'எப் - 16' ரக விமானங்கள் கொள்வனவு

(வாஷிங்டன்)

''சோவியத் யூனியனினதும் அது சார்பு நாடுகளினதும் அச்சுறுத்தல் இருக்கும்வரை பாகிஸ்தானுக்கான இராணுவ உதவிகளை அமெரிக்கா தொடர்ந்தும் வழங்குமென'' அமெரிக்க அரசு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு ஐந்து நாள் இராஜாங்க விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் பெனாஷிர் பூட்டோவின் வருகை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெனாஷிர் பூட்டோ இந்த விஜயத்தின்போது மேலும் அமெரிக்காவிடமிருந்து 60 எவ் - 16 போர் விமானங்களை வாங்குவது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளார். இந்த விமானங்களின் பெறுமதி 1¼ கோடி டாலர் ஆகும்.

வாங்கவுள்ள 60, எவ்- 16 விமானங்களுடன்பாகிஸ்தான் விமானப்படை தரப்பில் எவ்–16போர் விமானங்களின் எண்ணிக்கை நூறாக உயர்த்தப்படவுள்ளது. மேலும் 1990ம் ஆண்டில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 651 கோடி டாலர் உதவிகளை வழங்கும். இதில் 240 கோடி டாலர் இராணுவ உதவியாகும்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் உடன் பெனாஷிர் பூட்டோ இராணுவ உதவிகள் தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

---

## திரைப்பட குதிரைகளுக்கு நேர்ந்தகதி!

(சென்னை)

தென்னாட்டில் திரைப்பட உலகில் பிரபல்யமான இரு குதிரைகள் பார்வையாளர் ஒருவரின் சிறுதவறினால் உயிரிழக்க வேண்டிய சம்பவம் ஊட்டியில் ஓர் திரைப்படப் பிடிப்பு நிகழ்ச்சியில் நடந்துள்ளது.

ஊட்டியில் படப்பிடிப்பு ஒன்றில் கலந்து கொண்டு இரு குதிரைகளும் 'நடித்துக்' கொண்டிருந்தன. படப்பிடிப்பின் உச்சக் கட்டம். பார்வையாளர் ஒருவர் அண்மையில் இருந்த தேன் கூடொன்றைக் கண்டார். சாதாரண மனித இயல்பு தானே. எடுத்தார் கல்லை. அதன்மீது எறிந்தார்! கூட்டை விட்டு தேன் குழவிகலையத் தொடங்கியது. அவ்விடத்தில் நின்றவர்கள் அனைவரும் ஓடத்தொடங்கினர். ஓடாத மனிதர்கள் ஓட; ஓட வேண்டிய குதிரைகளோ நின்று, குழவிகளுடன் சண்டையிட்டன முடிவு? இரண்டுகுதிரைகளுமே பலமாக குழவிகள் கொட்டியதால் மரணத்தைத் தழுவிக் கொண்டன!

---

# அமெரிக்காவில் 12 ஆண்டுகளில் 2,500 பேருக்கு மரணதண்டனை
### சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

[வாஷிங்டன்]

அமெரிக்காவில் 1977ம்ஆண்டிலிருந்து இதுவரை 2,500க்கும் மேற்பட்டவர்கள் மரண தண்டனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கறுப்பினத்தவர்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக லண்டனிலிருந்து இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை அண்மையில் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்;

உலகில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கும் நாடுகளில் அமெரிக்காவும் குறிப்பிடத்தக்க ஒரு நாடு. இங்கு 1977ற்கு பின்னர் மரண தண்டனை பெற்ற கைதிகளில் 2,100 கைதிகள் மின்சார கதிரையில் ஏற்றி கொல்லப்பட்டுள்ளனர் ஏனையவர்கள் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்கு மரண தண்டனை பெற்றவர்களில் நாற்பது வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் கறுப்பினத்தவர். அமெரிக்க சனத்தொகையில் பன்னிரெண்டு வீதமே கறுப்பினத்தவர் உள்ளனர். 727 கறுப்பினத்தவர், வெள்ளையர்களை கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை கறுப்பர்களைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் 43 அமெரிக்கர்கள் மரண தண்டனை பெற்றுள்ளனர்.

மேற்படி சம்பவங்களை சுட்டிக்காட்டி மரணதண்டனை சட்டத்தை வாபஸ் பெறுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை பல தடவைகள் கேட்டிருந்தபோதும் இதுபற்றி அமெரிக்க அரசு எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

---

## கைதடியில் தமிழ் தினவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் இன்று தமிழ்த்தின விழாநடைபெறவுள்ளது. விழாவில் கைதடி கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பாடசாலை மாணவர்களின் நடன, நாடக, இசை நிகழ்ச்சிகள் விழாவில் சிறப்பு நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன.

---

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் எதிர்வரும் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்தவுள்ளது.

---

## சீனத் தலைநகரிலிருந்து
# வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

(பீக்கிங்)

சீனாவின் தலைநகர் பீக்கிங்கிலுள்ள வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் பலர் தற்போது அங்கிருந்து வெளியேறி வருகிறார்கள். சீனஅரசு ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு எதிராக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை கண்டித்தே இந்த வெளியேற்றம் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

இதேவேளை சீனாவிற்கான இராணுவ உதவிகளை நிறுத்தும் நாடுகளின் வரிசையில் ஜப்பானும் சேர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. [illegible] அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இவ்வாறு இராணுவ உதவிகளை நிறுத்தியுள்ளன.

சீன அரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை தொடர்பாக சோவியத் யூனியன் இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. இதுபல நாடுகளிலும் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை சீனாவில் பல நகரங்களிலும் வேலைநிறுத்த, ஆர்ப்பாட்ட பேரணிகள் நடந்து வருவதாக கூறப்படுகிறது. எனினும் கலவரம் [illegible] இராணுவமும் அனுப்பப்பட்டு வருகிறது.

---

## அமைதிப்படை விவகாரம்:
# இலங்கை தன்னிச்சையாக எடுத்த முடிவாம்

[புதுடில்லி]

இலங்கையிலுள்ள அமைதிப் படையை ஜூலை மாதத்திற்குள் திருப்பி அழைக்காது என்று இந்தியா உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இது குறித்த இந்தியத் தரப்பின் செய்தி, இந்தியா வந்திருந்த இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பெர்னாட் திலகரட்ணவுக்கு கையளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

அமைதிப்படை வாபஸ் தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவு அதிகாரி ஒருவர், இலங்கை அரசு தன்னிச்சையாக எடுத்த காலக்கெடு எதனையும் இந்தியா ஏற்காது என்று உறுதிபடத் தெரிவித்தார்.

படைகளைப் படிப்படியாக நிலைமைகளுக்கு ஏற்றவாறு வாபஸ்பெறுவதிலேயே இந்தியா உறுதியாக இருக்கிறது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பக்தனின் வலிமை எதில் உள்ளது?
அவன் கடவுளின் குழந்தையாகின்ருன்.
அவன் சிந்தும் பக்திக் கண்ணீரே
அவனுடைய வலிவுமிக்க ஆயுதமாகும்.
— ஸ்ரீராமகிருஷ்ணர்,

# நமது நோக்கு

## வெறும் வேப்பிலையால் இறங்காது இந்த வியாதி

அரிசி, சீனி, மீன் போன்ற உணவுப் பொருட்களினதும், பாவனைப் பொருட்களினதும் விலைகள் விஷம்போல் ஏறிவருகின்றன. உள்ளூர் உற்பத்தியான பாசிப் பயறின் விலை கூட முப்பது ரூபாவிற்கு மேல் உயர்ந்துவிட்டது.

உள்ளூர் விவசாய விளை பொருட்களின் விலைஏற்றம் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பாக அமையலாம். ஆனுல், பொதுமக்களைப் பொறுத்த மட்டில் விலை ஏற்றத்தால் அல்லற்பட்டு ஆற்ருது, அழுது வடியும் முகங்களைக் காண்பது சர்வ சாதாரண சங்கதியாகிவிட்டது.

விவசாய ஆராய்ச்சிப் பயிற்சிநிலையம் அவ்வப்போது சந்தை விலை அறிந்து பதிவுசெய்துவருகிறது. அதன் அறிக்கையின்படி காய்கறிகளின் விலைகள் கூட அதிகரித்துப் பொதுமக்களை வாட்டி வருகின்றன.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் இவ்வாண்டு ஏப்ரலில் 797.5 ஆக இருந்தது. ஆனுல் இது மே மாதத்தில் 806.7 ஆக அதிகரித்துள்ளது. இதன் தாற்பரியம் என்ன? மக்களின் வாழ்க்கைச் செலவு படிப்படியாக ஏறிக்கொண்டிருக்கின்றது, சுட்டெண்கள் - புள்ளிவிபரங்கள்– மக்களின் துன்பத்தை உண்மையாகப் பிரதிபலிக்கின்றனவா?

அரசாங்கம் என்ன செய்கின்றது? விலைகளைக் குறையுங்கள் என்று வர்த்தகர்களுக்கு வர்த்தக அமைச்சு விண்ணப்பிக்கிறது. ஆனுல் என்ன நடக்கிறது. மருந்துகளின் விலைகள் எதிர்பார்த்தபடி இறங்கினவா? விலையேற்ற வியாதி வெறும் வேப்பிலை அடிக்கு மசிந்துவிடுமா? நாம் நம்பவில்லை?

உள்ளூர் வர்த்தகத் திணைக்களம் என்ன செய்கிறது? என்ன சொல்கிறது? விலைக்கட்டுப்பாடு இல்லாத பொருட்களின் விலை அதிகரிக்கும்போது எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதிருக்கிறதாம்.

விலையேற்றம் என்பது இலங்கைப் பொருளாதாரத்தைப் பிடித்திருக்கும் பெருவியாதியின் ஒருகுறி– நோயை வெளியே காட்டும் ஒரு அறிகுறி! இந்த வியாதியின் பல்வேறு அம்சங்களை அறிந்து அதற்கேற்ற தீவிர சிகிச்சை செய்யாது, வெறுமனே வர்த்தகர்கள் மீது வேப்பிலை அடித்துப் பயனில்லை. சிலவேளை நோயின் வீறு குறையுமே தவிர, நோய் குணமாகாது.

நோயின் ஒரு அம்சம் பணவீக்கம். அது 18 வீதம் என்கிறது அரச அறிக்கைகள். ஆனுல் பொருளியல் நிலையை உள்ளும் புறமும் அறிந்தவர்கள், இது 30 வீதமாக இருக்கும் என்கிருர்கள்.

இதைவிட மிக அதிக அளவிற் பணவீக்கம் கண்டுள்ள இஸ்ரவேல், ஆர்ஜென்ரைனு ஆகியவற்றைக் காட்டி ஆறுதல்கொள்ளப் பார்க்கிருர்கள்சிலர். ஆனுல் உணவுப் பிரச்னையாற் கலவரங்கள் அங்கு நடப்பதை அறியாதவர் யார்?

செலாவணி வீதத்தை இறக்கிவைத்து டாலருடனை தொடர்பின் நிலை தளம்பாதிருக்க முயற்சி எடுக்க்கிறது மத்திய வங்கி. இது ஒரு சிறு வைத்தியம்.

இருபதுவீத நாணயமதிப்பிறக்கம் என்ற 'ஊசி'யைப் போட்டால் என்ன என்றுகூட பொருளாதார வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த 'ஊசி' ஏற்றினுல் வியாதி வீறுகொண்டு–பணவீக்கம் பெருகி– விலை ஏறி– வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மேலும் வேதனைக்குள்ளாவர் மக்கள்.

இராணுவத் தீர்வில் நம்பிக்கை வைத்துப் பெருமளவு வளத்தை விரயமாக்கியதின் விளைவை-பொருளாதாரச் சீரழிவை-விலை ஏற்றத்தை - வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை-இன்று நாம் அனுபவிக்கத்தொடங்கியிருக்கியுள்ளோம். உரிய முறையில்- உரியநேரத்தில்– துணிந்து சில நடவடிக்கைகள் எடுக்காவிடின்-பொருளாதார நோய்முற்றிவிடும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிருேம்!

## வருடாந்த மஹோற்சவம்

(வடமராட்சி)

பொலிகண்டி கந்தவன ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம் மாதம் 17ம் திகதி சப்பறமும் 18ம் திகதி தேர்த் திருவிழாவும் நடந்து, 19ம் திகதி நடக்கும் தீர்த்த உற்சவத்துடன் பூர்த்தியாகும்.

## மூர்த்தி தலமொடு தீர்த்தமும் கொண்டாள்

மூர்த்தி தலமொடு தீர்த்தமும் கொண்டாள்
மூலப் பழம்பெரும் சத்தியு மானுள்
நேர்த்தி பற்பல வைத்தவர்க் கெல்லாம்
நிறைவு பெறப்பல பேறுகள் தந்தாள்
சீர்த்தி யுடன்தவச் செல்வார்கள் எல்லாம்
சிந்தனை செய்யும் திரிபுரை யானுள்
போர்த்தி இயற்கையைப் பச்சை உடுத்தாள்
புரந்தரி நாக பூஷணி அம்மாள்

நாக. சண்முகநாதபிள்ளை

[* நயினை உற்சவம் இன்று 5ம் நாள்]

# போக்கு வரத்து வசதியின்றேல் மக்களின் முன்னேற்றம் தடைப்படும்

## பூநகரி எதிர்நோக்கும் பாரிய பிரச்னைகள்

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நகர்ப்புறத்தில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், பிரதம தபாலகம், வைத்தியசாலை, பிரதான கல்விநிலையம், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் களஞ்சியம், எரிபொருள் நிலையம் என்பன அமைந்திருப்பதனுல் ஏனைய கிராம மக்கள் தங்கள் பிரதான தேவைகளுக்காகப் பூநகரி நகரையே நாடவேண்டிய நிலையிலிருக்கின்ருர்கள்.

மாவட்ட அடிப்படையிலான நிர்வாகக் கடமைகளுக்காகவும், ஏனைய பொருட் தேவைகளுக்காகவும், விளை பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காகவும், மீனவர்களின் பிரதான சந்தை மையங்களாகவும், கணிசமானளவு அரச உத்தியோகத்தர்களின் கடமை நிலையங்களாகவும் பிரதான நகர்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி அமைந்திருப்பதனுல் பூநகரி வாழ் மக்கள் இந்நகரங்களுடன் கொண்டுள்ள போக்குவரத்துத் தொடர்பு பிரதானமாகின்றது.

### மக்கள் கருத்து

யாழ். மாவட்டத்திற்கும், மன்னூர் மாவட்டத்திற்குமான போக்குவரத்துத் தொடர்பு பூநகரிக்கூடாக நடைபெறுகிறது. இவ்விரு மாவட்டங்களுக்கிடையேயான இடைத்தூரம் பூநகரிக்கூடான போக்குவரத்தில் எழுபது மைல்களால் குறைகின்றது. இதனுல் மக்களுக்கு இப்பிரயாணம் இலகுவாகின்றது. இவற்றைவிட யாழ்ப்பாணக் கடல்நீரேரியில் பூநகரிக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் தேவைப்படும்போது கடற்போக்குவரவு பல வகைகளில் நடைபெறுகின்றது.

பூநகரி, நகர்ப் பகுதியுடன் தொடர்புகொள்ள வேண்டிய கௌதாரிமுனை கிராமசேவை அலுவலர் பிரிவு மக்களே போக்குவரத்துப் பிரச்னைகளால் மிகவும் பாதிக்கப்படுபவர்களாவர். இவர்கள் பூநகரி நகரிலிருந்து பத்து மைல் தூரத்திற்குள் வசித்தாலும் கல்முனை, மண்ணித்தலை, விளுசியோடை கிராம மக்கள் பூநகரிக்கு வரும்போது, இரண்டு மைல்களுக்கு மேல் நடந்தேயாகவேண்டும். இங்கு கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களான ஆசிரியர்களுக்கும் இதே நிலைமைதான். மற்றும் ஏனைய கிராமங்களான கௌதாரிமுனை, வெட்டுக்காட்டுக் கிராம மக்கள் துவிச்சக்கர வண்டி அல்லது உழவு இயந்திரமூலம் பிரயாணம்செய்ய முடியும்.

இப்பகுதியிலுள்ள நோயாளிகளை பூநகரி வைத்தியசாலைக்கு எடுத்துவருவதற்கு முன்பு, உடனடி வைத்திய உதவியின்றி இயற்கை மரணங்களை எய்திய சூழ்நிலைகள் பல. எனவே இப்பகுதிக் கிராம மக்களுக்கு உடனடியாக விதிப் போக்குவரத்து ஏற்படுத்துதல் அவசியமாகின்றது.

பூநகரிக்கு மிகத் தூரத்தில் வசிக்கின்ருர்கள் இரணைதிவு கிராமசேவையலுவலர் பிரிவு மக்கள். இவர்களைப் பொறுத்தவரை அத்தியாவசிய தேவைகளிலொன்ருன வைத்திய சேவைக்கு மருந்தகம் ஒன்றிருப்பதனுல் ஓரளவிற்கு ஆறுதலடைய முடியும். [illegible]

போக்குவரத்து வசதியற்றவர்கள் இத்தீவு மக்களே. மீனவர்களாகிய இத்தீவு மக்கள், தாங்கள் பிடிக்கும் மீன்களைக் கருவாடாகப் பதப்படுத்திச் சந்தைப்படுத்துகின்ருர்கள். இதனுலேயே அட்டை பிடித்தலையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் சாதாரணமாகத் தமது சொந்த வள்ளங்களிலோ அல்லது உறவினர்களின் வள்ளங்களிலோ 7—12 மைல்கள்வரை கடற்பிரயாணம்செய்து,வலைப்பாடு அல்லது நாச்சிக்குடா கிராமத்தை அடையவேண்டும். அதன்பின் எப்படியாவது பூநகரிக்கு வரவேண்டுமானுல் மன்னூரிலிருந்துவரும் பஸ்ஸுக்காக நாச்சிக்குடாவிலிருந்து ஒன்றரை மைலைக் கடந்து நாச்சிக்குடாச் சந்தியென அழைக்கப்படும் முழங்காவிலின் ஒரு பகுதிக்குச் செல்லவேண்டும். வலைப்பாட்டுக் கிராமத்துக்குப் போகவேண்டுமாயின் தனியார் அல்லது போக்குவரத்துச் சபை வாகனங்களுக்காக வேராவில் கிராமத்திற்கு ஒன்றரை மைல் தூரம் பொதிகளுடன் நடந்து செல்ல வேண்டும். மன்னூர் சாலை பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டுமானுல் ஏழு மைல்களுக்கு மேல் பல்லவராயன்கட்டு அல்லது பன்னிரண்டாம்கட்டை என அழைக்கப்படும் இடத்திற்கே நடந்து செல்ல வேண்டும். (மன்னூர் சாலை பஸ் சேவையைத் தவிர ஏனைய சேவைகள் நாளுக்கு ஒரு சேவையே) எனவே இரணைதிவு மக்களின் பிரயாணத்தேவைக்கு வீதியமைப்பு, வீதிச்சீரமைப்பு, இயந்திரவள்ளப் போக்குவரத்து என்பன ஏற்படுத்தல் அவசியமாகின்றது.

பல்லவராயன்கட்டு 'முழங்காவில் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள மக்களில் முழங்காவில் கிராமத்தவர்கள் மட்டுமே மன்னூர் - பூநகரி பிரதான வீதிக்கண்மையில் வசிக்கின்ருர்கள். ஏனைய கிராமத்தவர்கள் குறைந்தது ஒரு மைலுக்கப்பாலே வசிக்கின்ருர்கள். எனவே இக்கிராம மக்களுக்கான பாதையமைப்பு பாதைச்சிரமைப், வடிகாலமைப்பு போன்றவை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். அல்லாவிடில் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே மக்கள் போக்குவரத்து செய்யவேண்டியேற்படும். குறிப்பாக பல்லவராயன்கட்டு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள கிராமங்கள் பிரதான வீதியுடன் தொடர்பு கொள்ளுவதற்கு பல்லவராயன் ஆற்றுச் சமவெளி பிரதான தடையாக அமைந்துள்ளது.

மேலும் பூநகரிக் கண்மையாக உள்ள நல்லூர், கொல்லகுறிச்சிக் கிராம சேவையாளர் பிரிவு மக்களும் செட்டியகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவுகளுடனை விதிகளால் இணைக்கப்பட்டுள்ள கறுக்காய்த்திவு மக்களும் ஒழுங்கான வீதிகளின்மையால் கஷ்டமடைகின்ருர்கள்.

பூநகரி நகரமைந்துள்ள மட்டுவில்நாடு கிராமம் கிழக்கு மேற்கு என இரண்டு கிராம சேவையாளர் பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் நெற்புலவு, நகரக்குளம், நல்லதண்ணிர்க்குளம், கரிக்கோட்டுக்குளம், வில்லடி, கிராமங்களும் சீரான பாதைகள் இல்லாமல் பிரயாண கஷ்டங்களை அனுபவிக்கின்ருர்கள். மீன்பிடிக் கிராமமான பள்ளிக்குடாவில் வசிக்கும் மக்களும் இதே நிலையிலிருக்கிருர்கள்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர்களுடனை போக்குவரத்துச்சேவை ஒழுங்காக இருந்த போதிலும் மிகவும் பிரதானமாக கிளிநொச்சி நகருடனை போக்குவரத்து ஒழுங்குமுறையாக இல்லை. வீதியும் மிகவும் சீரற்றே காணப்படுகின்றது. பூநகரி பரந்தன் கிளிநொச்சிவீதி வருடாவருடம் நிரோட்டங்களால் பழுதடையும் நிலையிலுள்ளன. இவ்வீதி சரியான முறையில் பராமரிக்காதுவிடில் வாகனப்போக்குவரத்திற்கு ஏற்றதாயிராது.

யாழ்.மாவட்டத்திலிருந்து மன்னூர் மாவட்டத்திற்கான போக்குவரத்துச்சேவை பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு இணைப்பு வழியாவே நடைபெறுகிறது. இத்தொடர்பில் பூநகரி மகாதேவா தாம்போதி பாலவேலை மிகவும் பிரதானமானது, இன்று மகாதேவா தாம்போதி கடல்வழி 870 அடிகளால் குறுகியுள்ளது. இத்தூரத்துக்கும் பாலம் அமைக்கப்பட்டு விட்டால் இலகுவான போக்குவரவு யாழ், மன்னூர் மாவட்டங்களுக்கிடையில் நடைபெறும். இதனுல் மன்னூருக்கான பிரயாண தூரம் (நேரடித்தொடர்பு) எழுபது மைல்களால் குறைவடையும் மேலும் கொழும்பு, ஏனைய நகர்களுடனை போக்குவரத்து இப்பாதையால் ஏற்படும். எனவே இலகுவான போக்குவரத்துச் சேவையை பூநகரி உதவி அரசாங்க அதிபர் மக்கள் சகல நகரங்களுடனும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இதனுல் பூநகரிப்பகுதி பலதுறைகளிலும் முன்னேற்றமடையும்.

மேற்கூறியவற்ருல் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்கு அவசிய தேவைக்காரணியாக போக்குவரத்து இருக்கின்றது. எனவே சீரான போக்குவரத்து அமைய சங்குப்பிட்டி கேரதீவு பாலவேலை வீதியமைப்பு, வீதிச்சீரமைப்பு வீதிப்பாதுகாப்பு பிரதான வீதிகள் தேவைகருதி விஸ்தீரணப்படுத்தல், போதுமானதும் உறுதியான கால அட்டவணைப்படியாததுமான போக்குவரத்துச் சேவை என்பவற்றை ஏற்படுத்துவதில் மக்களார்வம் திசைதிருப்பப்படவேண்டும்.

கா. குலசேகரம்
(பூநகரி)

## பலதும் பத்தும்

### ஆண்டு - மாதம் திகதி - நேரம்!

அண்மையிலே பனுமா நாட்டில் தேர்தல் நடந்தது. முடிவுகள் சர்ச்சையைக் கிளப்பின. தேர்தலையே ரத்துச் செய்து விட்டார் ஆட்சித் தலைவர்நொறிக்கா.

நெருக்கடிநிலை உருவாகியது. நொறிக்காவுடன் பகைமை பாராட்டிய அமெரிக்கா இரண்டாயிரம் துருப்புக்களை அங்கு அனுப்பியது. இது எப்படி முடிந்தது? ஒரு நாட்டிற்குள் துருப்புக்களை அனுப்புவது அத்துமீறல் ஆகாதா? பிற நாடுகள் என் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை?

1977-ல் பனுமாக் கால்வாய் நிர்வாகம் பனுமா நாட்டிற்கே கையளிக்கப்பட்டது. அப்போது ஓர் ஒப்பந்தம் உருவானது. அதிலே ஒருவிதி – அதன்படி 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் திகதி பகல் 12-00 மணிவரை அமெரிக்கா தனது தளங்களை வைத்திருக்கலாம்!

-- வாணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆரோக்கிய வாழ்வுக்கு

(நேற்றைய தொடர்ச்சி)

### 2. வச்சிராசனம்

அடுத்தபடியாக வச்சிராசனம் செய்யும் விதம்: விரிப்பில் இருந்து கால்களை பின்னால் மடக்கி பிருஷ்டபக்கமாக இடுப்புக்கு கீழ்ப்பகுதியில் இருக்க வேண்டும். உடம்பின் மேற்பகுதி நிமிர்ந்து இருக்க வேண்டும்.

#### பலன்கள்

இந்த வச்சிராசனத்தினால் அநேக நன்மைகள் உண்டு. இது பசியை உண்டுபண்ணும் வச்சிராசனம் வயிற்றில் அஜீரணம் இருக்காது. குதிவாதம், முட்டிவாதம் வராமல் தடுக்கும். பத்மாசனம் போட வராதவர்கள் வச்சிராசனம் போட்டுப் பயனடையலாம்.

### புஜங்காசனம்

ஆறுஅடி நீளமான விரிப்பில் முகம் குப்புறப் படுகிதுக்கொண்டு கைகளை மடக்த் உள்ளங்கைகள் நிலத்தில் பட விரல்கள் முன் பார்த்தபடி நிலத்தில் படிய வைத்து படுக்க வேண்டும். கால்களைப் பின்நீட்டி, குதிக்கால்களை அணைத்தவாறு இருக்கப் புறங்கால்களை நிலத்தில் படிய வைக்க வேண்டும். படுத்துக்கொண்டு பின்பு பாம்புபடம் எடுப்பதுபோல முன்பகுதியை எழுப்பி இடுப்புப் பகுதியை நிலத்தில் படிந்து இருக்கவிட வேண்டும். அடிவயிறும் நிலத்தில் பட இருக்க வேண்டும். நிலத்தைவிட்டு மேலே எழும்பும் போது சுவாசத்தை மெதுவாக வெளியில்விட வேண்டும்.

அந்த நிலையில் இருந்துகொண்டு நன்கு சுவாசம் இழுத்து விட்டபடி இருந்து நான்காவது சுவாசத்தை வெளியில் விட்டபடி நிலத்திற்கு வரவேண்டும். இந்த விதமாக நான்கு தடவைகள் புஜங்காசனம் செய்ய வேண்டும், சுவாசமே முக்கியமான தாகக் கருதியபடி அவதானமாக செய்யப்பட வேண்டும்.

#### பலன்கள்

முக்கியமாக முதுகெலும்பு வளையாது பாதுகாக்கும். சுளுக்கு ஏற்பட்டாலும் நிற்க மாட்டாது, முதுகுச்சதைகள் இழுக்கப்படுவதால் இளமையைக் கொடுக்கிறது, நரம்புகளில் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. நரம்புகள் வலுவடைகின்றன. முதுகெலும்பு மேல்நோக்கி வளைக்கப்படுவதால் வயிற்றில்உள்ள ஊளைச்சதைகள் கரைந்து வலுவடைகின்றன. பெருந் தொந்திகள் கரைந்து போகும் பெரும் நன்மையளிக்கும்.

(வளரும்)

சுவாமிஜி
ஸ்ரீ சிதானந்தயோகி

---

கொமெய்னி மறைவு:

## முஸ்லிம் லீக் யாழ். கிளை அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஈரானின் மறைந்த ஆன்மீகத் தலைவரும் இஸ்லாமியப் புரட்சியாளருமான அயத்துல்லா கொமெய்னி (ருஹுல்லா) அவர்களின் மறைவுக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் யாழ் கிளை அனுதாபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தலீக் பத்திரிகை செய்தி ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

## கந்தபுராண கதாப் பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு, நல்லைக்குருமணியின் பிரதம சீடன், வித்வ சுகாமிர்தசாகரம் நீராவியடி பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்த சர்மா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 6 மணக்கு 'கந்தபுராணம்' தொடர் பிரசங்கம் பக்கவாத்திய சகிதம் நிகழ்த்தவுள்ளார்

## ஐந்து விதமான மதிய உணவு

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலய மதிய உணவுக்குழு மாணவர்களுக்கு உணவு தயாரித்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. மதிய உணவாக சாதம், பயத்தங்கலவை, பால், வடை, வாழைப்பழம், போன்றவை பரிமாறப்பட்டு வருகின்றன.

வாரத்தில் ஐந்து நாட்களும் ஐந்து விதமான மதிய உணவைத் தயாரித்துக் கொடுப்பதற்கு இந்த உணவுக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் ஆகியோரைக் கொண்ட ஐந்து பேர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

---

## இப்படியும் நடக்கிறது

வானொலியில் செய்திகள் வாசிப்பதென்பது, ஓர் தனிக்கலை என்று சொல்லலாம்.

தமிழ்ச் செய்திகளை - விமர்சனங்களைப் பொறுத்தமட்டில், பி. பி. ஸி. தமிழோசை சங்கர் நமக்குக் கிடைத்த ஒரு 'சொத்து' என்று கூடக் கூறலாம். அவரிடம் தமிழ் கொஞ்சி விளையாடும்.

சில நாட்களுக்கு முன்னர் 'ஆல் இந்திய றேடியோ' மாநிலச் செய்திகளில் (சென்னை நிலையம்) ஓர் அம்மையார் செய்திகளை வாசித்துக்கொண்டிருக்கின்றார். ஒரு கட்டத்தில்......

''தமிழ்நாட்டில் (ஒரு இடத்தைக் குறிப்பிட்டார். ஞாபகமில்லை) ஒரு கோழி மிகவும் எடை கூடிய முட்டையொன்றை இட்டு சாதனை நிலைநாட்டியிருக்கிறது...'' என்று கூறிய அந்தப் பெண் அறிவிப்பாளர்... ''இந்தப் பெரிய முட்டையை ஏனைய கோழிகளும் போய்ப் பார்க்கட்டும்...'' என்றுவிட்டார் ஒரு 'ஜோக்!,

இதே பாணியில்தான் நேற்றுக்காலையில் ஒலிபரப்பப்பட்ட மாநிலச் செய்தியில்; நடிப்பு உலகில் பிரபல்யமான இரண்டு குதிரைகள் ஊட்டியில் நடைபெற்ற ஒரு படப்பிடிப்பின்போது பரிதாபமாக இறந்துபோன செய்தியை பெண் அறிவிப்பாளர் 'ஜோக்'குடன் வெளியிட்டார். (தயவுசெய்து இதன் விபரத்தை மூன்றும் பக்கம் பார்க்கவும்)

"ஊடுருவி"

---

"இன்றைய சூழலில்

## எதிர்கால நம்பிக்கையை விளையாட்டு நிகழ்ச்சிகள் தருகின்றன"

(சாவகச்சேரி)

''எம் மத்தியில் அன்றாடம் நடந்துவருகின்ற துர்ப்பாக்கிய சம்பவங்களுக்கும் மத்தியில், சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் நமக்கு மகிழ்ச்சியையும், மன் நிறைவையும் எதிர்கால நம்பிக்கையையும் தருவதாக உள்ளன. எனவே இவ்வாறான நிகழ்ச்சிகளைக் கிராமங்களில் மென்மேலும் நடைபெறப் பெற்றோர், நலன்விரும்பிகள் ஊக்குவித்தல் வேண்டும்''.

இவ்வாறு கைதடி நவீல்ட் பாடசாலையின் துணைஅதிபரும் அறவழிப்போராட்டக் குழுவின் கல்வி: ஆலோசகருமான திரு.கே.கோபாலகிருஷ்ணன் நுணுவில் மேற்கு அம்பாள் அறவழிப் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அறவழிப் போட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக ''வைத்திய வாரிதி'' டாக்டர் பே. பிலிப்ஸ் கலந்துகொண்டார்,

திரு. கோபால்கிருஷ்ணன் அங்கு மேலும் பேசுகையில், ''இக் கிராமத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் திறமைகள், ஆற்றல்கள் மூலம் இவர்கள் எதிர்காலத்தில் நம் சமுதாயத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் மிளிர்வார்கள் என்ற நம்பிக்கை ஒளி தெரிகின்றது'' என்றார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு திருமதி கோபாலகிருஷ்ணன் பரிசில்களை வழங்கினார். நேரு இல்லம் முதலாம இடத்தையும் காந்தி இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

## ஆகஸ்ட் 21 ல் புலமை பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இருபதாம் திகதி நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர்களிடம் இதற்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலையின் அதிபர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ். கோட்டக்கல்வி அலுவலகம் உட்பட சகல கோட்டக் கல்வி அலுவலகங்களும் தத்தம்பகுதி கொத்தணி அதிபர்களுக்கு மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

## சண்முகதாஸன் எழுதிய நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச்செயலாளர் திரு. நா. சண்முகதாஸின் எழுபதாவது பிறந்த நாளையொட்டி, அவரால் எழுதப்பெற்ற 'நான் ஒரு கம்யூனிஸ்டாக இருப்பதில் பெருமைப்படுகிறேன்' என்ற வாழ்க்கை வரலாறு புத்தகம் அடுத்த ஜுலை மாதம் நாலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

கொழும்பு மத்திய நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி புத்தக வெளியீட்டுவிழாவில் குமாரி ஜெயவர்த்தனா, முன்னாள் நீதியரசர் இராஜரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## பொருட்களை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தின் புனர்வாழ்வு அமைச்சு, திட்டமிடல், கிராம அபிவிருத்தி ஆகிய பகுதிகளில் இருந்த சில பொருட்களைக் காணவில்லையெனத் தெரிகிறது.

இந்த அலுவலகங்களில் இருந்த பொருட்களின் தொகை குறைந்து காணப்படுகிறதாம்.

## விரைவில் நியமனக்கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கிராமசேவகர்களுக்கு நியமனக்கடிதம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்நியமனக் கடிதங்கள் கொழும்பிலுள்ள அலுவலகத்தில் இருப்பதாகவும் அவை யாழ், செயலகத்திற்கு வந்து சேர்ந்ததும் உரியவர்களுக்கு வழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

---


# "தொழிற் பயிற்சிகள்"

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சி அளிக்கப்படும்.

O COMPUTER PROGRAMMING IN BASIC LANGUGAE
60 மணித்தியாலம் RADIO SHACK, LASER, ACORN COMPUTER களில் செய்முறைப்பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

O றேடியோ, ரெலிவிஷன் றிப்பயறிங்:
சகல இன றேடியோக்கள், ரெலிவிஷன்கள் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

O வீடியோ, டெக் றிப்பயறிங்:
காலம்:- 3 மாதம்.

O றிவைண்டிங்:
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றிவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

O எலெக்ரிக்கல் வயறிங்:
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சி அளிக்கப்படும்.
காலம்:- 2 மாதம்.

பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 15-06-89 [கிழமை நாட்கள்]
17-06-89 [சனி, ஞாயிறு]

குறிப்பு:- வெளிநாடு செல்பவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் குறைந்த காலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

## Jaffna Technical Institute

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமூகப்பணியில் ஈடுபடும்போதே ஆன்மார்த்தமான சுகத்தை காணலாம்"

(உடுவில்)

''சமூக சேவைப் பணியானது பொது நோக்கை அடிப்படையாகக் கொண்டது. அர்ப்பணிப்புடன் சம்பந்தப்பட்ட பணி இது. வீட்டுவேலைகள், பிள்ளைகளின் கல்வி, சொந்த மேம்பாட்டுக் கருமங்கள் போன்றவற்றில் ஈடுபடாதிருந்தும் சமூகப் பணியில் ஈடுபடும்போது ஆன்மார்த்தமான சுகத்தை நாம் காண முடிகின்றது''.

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தமது எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய உறுப்பினர் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வே. கந்தசாமி தலைமையில் சுன்னுகம் பொதுசன நூலக மண்டபத்தில் மேற்படி கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

திரு. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''மக்கள் அமைப்புக்கள் மக்களின் தேவைகருதிப் பணியாற்றவேண்டியது அவசியம். சனசமூக நிலையப் பிரதிநிதிகளான நீங்கள் மக்களுக்குக் கஷ்டநிலை ஏற்பட்ட காலங்களில் அவர்களுக்குத் திறம்படச் சேவைசெய்துள்ளீர்கள். உங்களுக்கேற்படும் அபாயங்களைக்கூடப் பொருட்படுத்தாது பணியாற்றிமையையிட்டுப் பாராட்டுகிறேன்.

நாட்டுச் சூழ்நிலைகள் எப்படிப்பட்டவையாக இருப்பினும் சனசமூக நிலையங்கள் தமது அடிப்படைப் பணிகளை யாவது ஆற்றத் தவறக்கூடாது.

அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய நிதி உதவிகள் மற்றும் உதவிகள் பலவும் வரவரக் குறைந்து கொண்டு போகின்றன. இந்நிலையில் சனசமூக நிலையங்கள் தாமாகவே இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்க உதவிகளும் பணமும் சனசமூக நிலையங்கள் சீராக இயங்குவதற்கு போதுமானவையாக இல்லை. கிராம மக்களின் சக்தியில் சனசமூக நிலையங்கள் இயங்கக் கூடியதாக அமைய வேண்டும்.

யாழ்ப்பாணம் உள்ளூராட்சித்திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வே. கந்தசாமி உரையாற்றுகையில் கூறியதாவது.

மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் முயற்சிப்பது போல எமது பிரதேசத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களையும் ஒற்றுமைப்படுத்தி கட்டுக்கோப்பான முறையில் அமைக்கும் பாரிய பொறுப்பு எமக்குண்டு. அவ்வாறுன சங்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது அவசியகும். இவ்வாறு கூறிமாஞர்.

இப்பிரதேச சனசமூக நிலைய சமாசத்தின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. திருஞானசம்பந்தர், உபதலைவர்: திரு. சி. சின்னத்தம்பி, செயலாளர்; திரு. சி. மகாலிங்கம், உப-செயலானர் திரு. சி. தர்மலிங்கம், பொருளாளர் திரு. த. ஜெயசீலன்.

ஆறு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# கிளி. மாவட்ட புனரமைப்புக்கு 1 கோடி 40 லட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட புனரமைப்புக்கென ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபா புனர்வாழ்வு அமைச்சினுல் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணம் உள்ளூராட்சி சபைகளுக்கும், தண்ணீர் விநியோகத்திட்டத்திற்குமென ஒதுக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் விநியோகத் திட்டத்திற்கு ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாவும், உள்ளூராட்சிச் சபைகளின் வேலைகளுக்கு முப்பது இலட்சம் ரூபாவும செலவு செய்யப்படவுள்ளது.

வீதிகள் அபிவிருத்தி, உடைந்த கட்டிடங்கள் திருத்துதல், நீர் விநியோகக் குழாய்கள் அமைத்தல், நன்னீர் திட்டம், அணைக்கட்டுத் திட்டம் ஆகிய வேலைகள் இதன் மூலம் செய்யப்படவுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அலபிரட் தெரிவித்தார்.

# இராசி பலன்

**09-06-1989**

ஷஷ்டி இரவு 9.33 வரை; ஆயிலியம் காலை 7-44 வரை. மரணயோகம். ராகுகாலம் 10.22-11.56. ஷஷ்டி விரதம். சுபகருமங்களுக்கு அசுபதினம்.

மேஷம்: காரியங்கள் இழுபறி, பெரியோர் உதவி, வீண் செலவு. காதல் களிப்பு, நிலுவைகள் வசூல்.

இடபம்: தொழில் சச்சரவு, பிரச்னைகள் உருவாகும், மகிழ்ச்சிக்குறைவு, ஆடம்பரச் செலவு, கவலை.

மிதுனம்: மனநிறை, கல்வி முன்னேற்றம். குடும்பஅமைதி, இனசன உறவு, தொழில் மந்தநிலை.

கடகம்: மேலதிகாரிகள் சிற்றம், பணமுடை, உறவினர் தொல்லை, குடும்ப உறவில் விரிசல்.

சிங்கம்: மனச்சந்தோஷம், பதவிச்சிறப்பு, வியாபார முன்னேற்றம், வாகன வசதி, நண்பர் உதவி.

கன்னி: காரியத்தடை, தொழில் பிணக்கு, மனச்சுமை, காதல் தோல்வி, குடும்ப அலைச்சல்.

துலாம்: பதவி உயர்வு, மேலதிகாரிகள் நல்லெண்ணம் வருமான உயர்வு, குடும்ப சுகம், வெற்றி.

விருச்சிகம்: முதலீடு பாதிப்பு, தொழில் லாபக் குறைவு குடும்பசுகம், விரக்தியான போக்கு, தர்மசிந்தனை.

தனுசு: களத்திரபிணி, புத்திரர் மகிழ்ச்சி, கருத்து மோதல், பணவரவு, மேலதிகாரிகள் பாராட்டு.

மகரம்: அலைச்சலும் ஏமாற்றமுமுண்டு, அதிகாரிகள்குறை கூறல், செலவுகள் கூடுதல், குடும்பத்தில் அமைதியின்மை.

கும்பம்: விவாகசித்தி, எதிர்பாராத லாபம், மனமகிழ்ச்சி, குடும்பச்சிறப்பு, பெரியோர் ஆசி.

மீனம்: உடல்நலம் பாதிக்கும். மன அமைதி, திடீர் நெருக்கடி, அரவணைப்பு இல்லாதிருத்தல், செலவு.

# "187 நாடுகளில் வை. எம்.சி.ஏ, இயங்குகிறது"

(சுண்டிக்குழி)

'இளைஞர் கிறிஸ்தவ சங்கம் சேர். ஜோர்ச் வில்லியம் என்பவரால் 1844-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி லண்டன்மா நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இச்சங்கத்தின் கிளைகள் 187 நாடுகளில் அமைக்கப்பட்டு மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து வருகிறது.'

இவ்வாறு நவாலி வை.எம்.சி. ஏ. (இளைஞர் கிறிஸ்தவ சங்கம்)யின் துணைத்தலைவர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் அதன் 145-வது ஸ்தாபகதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

பேடன்பவல் பிரபு 1907-ம் ஆண்டில் வை. எம். சி. ஏ.யில் அங்கம் வகித்து சர்வதேசமும் வியக்கும் வண்ணம் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார், என்றும் நவாலியில் 1891-ம் ஆண்டு ஜூன் 5-ம் திகதி இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது, என்றும் திரு. தேவகடாட்சம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

# "சிறுதொழில்களை ஆரம்பித்து குடும்ப பொருளாதாரத்தை வளம்படுத்துங்கள்"

(உடுவில்)

''அரசாங்க உத்தியோகத்தின் மூலம் தான் எமது பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ள முடியும் என்று எண்ணக்கூடாது. சிற்றாழியர்களாக தனிப்பட்டவர்களின் கீழ் வேலை செய்த பலர் இன்று பொருளாதாரத்தில் மேம்பாடடைந்து முதலாளிகளாக திகழ்வதை காணமுடிகிறது. தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து, போலி கௌரவங்களை மறந்து வாழ்க்கைக்கு பயன்தரக்கூடிய தொழில் முயற்சிகளில் எம்மை ஈடுபடுத்திக்கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வாறு இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் முறைசாராக் கல்வியை ஆரம்பித்து வைத்து உரையாற்றியதொழில் நுட்பபாடக்கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் கூறினர்.

இந்த வைபவத்தில் மேலும் பேசிய போது அவர் கூறியதாவது:

''பாடசாலையை விட்டுவெளியேறி வேலைவாய்ப்பு இன்றி இருக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெறக்கூடிய தொழில் பயிற்சிகளை அளிப்பதே முறைசாரா கல்வியின் முக்கிய நோக்கமாகும்,

முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஒவ்வொருவரும் தமது பயிற்சியின் பின் தனியாகவோ கூட்டுறவுமுறையிலோ அல்லது அரச கூட்டுத்தாபன நிறுவனங்களிலோ வேலை வாய்ப்பை தேடிக்கொள்ள முடியும். அல்லது தாமாகவே சுயதொழில் ஒன்றினை தேடிக் கொள்ளவும் முடியும்.

எமது கல்வித்திட்டத்தின் கீழ் பயிற்சிபெறும் ஒவ்வொருவரும் சுயமாக தொழில் வாய்ப்பைத்தேடிக் கொள்ளும் வரை நாம் அவர்களுக்கு உதவிகள் வழங்குவோம்.

தொழில் பயிற்சியை முடித்ததும் தொழிலை எவ்வாறு தொடங்குவது என்ற நிலைப்பாடு ஏற்படும்போது துணைத் தொடர்பு நிலையங்களுடனை உதவிகள் சேவைகளை பெறக் கூடியதாக இக்கல்வி அமைகிறது.

இப்பயிற்சி நெறிகளுக்கென எமது கல்வித்திணைக்களத்தில் தொழில் வழிகாட்டல் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்தலுக்கான ஆலோசனைகள் நூலகவசதிகள் வங்கி காப்புறுதி நிறுவனங்களுடனை தொடர்பை ஏற்படுத்தும் வசதிகள் ஆலோசனை வழங்கல் போன்ற பல சேவைகளை இத்தொழில் வழிகாட்டல் பிரிவில் நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

படித்துவிட்டு பெற்றேர்களுக்கு பாரமாக இராமல் சிறுதொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் குடும்பத்துக்கான பொருளாதாரத்தை தேடிக்கொள்வதுடன் நாட்டின் உற்பத்திப் பெருக்கம் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கும் உதவி செய்பவர்களாக திகழ முடியும்''. இவ்வாறு அவர் கூறினர்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை வேற்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு, மகாலிங்கத்தினுல் நாளை 10ம் தேதி காலை நாட்டப்படவிருக்கிறது.

## திடீர் பரிசோதனை

(சுன்னுகம்)

மருதனுமடம் கோட்டக் கல்விப் பிரிவில் அடங்கும் பாடசாலைகளில் மதிய போசனம் வழங்குதல் சம்பந்தமாக மேற்பார்வைப் பணிகள் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலக உயரதிகாரிகள் பாடசாலைகளுக்குக் திடீர் விஜயம் செய்து வழங்கப்படும் உணவு வகைகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இதுவரை பார்வையிட்ட பாடசாலைகளில் கந்தரோடை கந்தையா வித்தியாசாலையில் வழங்கப்பட்ட மதிய போசனம் உயரதிகாரிகளின் பாராட்டைப் பெற்றுள்ளதுனத் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி

(மன்னர்)

நானட்டான் மகாவித்தியாலய இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டி, மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மகாவித்தியாலய அதிபர் திரு. ஏ. ஏ. தருஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற இல்லங்களுக்கு மன்னர் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த பிரதம கல்வி அதிகாரி இஸட். ஏ. ரஹீம் பரிசுகள் வழங்கினர்.

# விளையாட்டுத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

(உடுவில்)

''கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்காத சந்தர்ப்பத்திலும் மாவட்ட மட்டத்தில் மெய்வல்லுநர் போட்டிகளை சிறப்பாக நடாத்தி யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் விளையாட்டுத்துறையிலும் சிறப்புடையவர்கள் என்பதை நிரூபிக்க எமது கோட்ட மட்டத்தில் சகல ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்.''

மருதனுமடம்கோட்டக்கல்வி பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளின்போது பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய மருதனுமடம் கோட்டக்கல்விஅதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் இவ்வாறு கூறினர்.

மெய்வல்லுநர் போட்டிகள் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகள்அதிபர் திரு.கே. இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்றஇப்போட்டிகளில் சிறப்பு விருந்தினராக உடுவில் கல்வி அதிகாரி திரு.இ. அருணகிரிராசா கலந்துகொண்டார்.

## தபால்சேவை சீரானது

[புங்குடுதீவு]

தீவுப் பகுதிகளுக்கான தபால் சேவைகள் சீராக நடைபெற்றுவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதிகளுக்குக் கொண்டு வருகின்ற இ. போ. ச.வுக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் அவ்வப்போது நேரகாலத்திற்குச் சேவைகளை மேற்கொண்டு வருவதனுலேயே தபால்க[illegible] [illegible] விநியோகிக்க உதவியாகவிருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குப்பை, கூழங்களால்

# பாதிக்கப்பட்ட நிலையில் காக்கைதீவு வீதி

(சுண்டுக்குளி)

கல்லுண்டாய் காக்கைதீவு வீதியால் பிரயாணம்செய்யும் மக்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு மிகவும் கஷ்டமான நிலையில் செல்வதைத் தினமும் காணமுடிகிறது.

இவ்வீதியின் இரு மருங்கிலும் யாழ். மாநகரசபையினர் லொறிகளில் குப்பை கூழங்களைத் தினமும் கொட்டுவதனுலும், இறந்த அடு மாடுகளை இவ்விடத்தில் வீசுவதாலும், இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் எலும்புகளையும் மற்றும் கழிவுகளையும் இங்கு அகற்றுவதாலும் இப்பகுதி எந்நேரமும் துர்நாற்றம் வீசியபடியேயுள்ளது.

இதனுல் இவ்வீதியால் செல்லும் மக்களினதும், இதன் சுற்றுடலில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களினதும் சுகாதாரத்துக்கு இடையூறு விளைவிப்பதுடன் பல தரப்பட்ட தொற்றுநோய்களும் உருவாகும் சூழ்நிலை தோன்றியுள்ளது.

மேலும் இப்பகுதியில் பாவிக்கப்பட்ட பாரிய இரும்பு, தகரப் பொருட்களும், கழற்றப்பட்ட மினிவான்கள், சிறிய வான்களின் 'பொடியும்' வீதி ஓரங்களில் வீசப்பட்டுள்ளதால் பாரதூரமான விபத்துக்கள் ஏற்படும்நிலையும் தோன்றியுள்ளது.

இவைதொடர்பாக சுகாதாரப் பகுதியினரும், யாழ். மாநகர சபையினரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

# கடந்த ஆண்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமுள்ள பஸ்களின் தொகுதியில் 54 சதவீதமானவை சேவைக்கு ஏற்றவையல்ல. வடபிரதேசம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழிற்பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. சேவையில் ஈடுபட்டிருந்தபோது அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட பழைய – புதிய பஸ்களின் மொத்த எண்ணிக்கை 609 ஆகும். கடந்த ஆண்டு உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக இ. போ. ச.வுக்கு ஏற்பட்ட இழப்பு 22 கோடி ரூபாவாகும்.

இலங்கைப் புகையிரதப் பகுதி 1986ல் 289 கோடியே 20 லட்சம் ரூபாவினாலும், 1987ல் 247 கோடியே 80 லட்சம் ரூபாவினாலும், 1988ல் 478 கோடியே 90 லட்சம் ரூபாவினாலும் தொழிற்பாட்டு ரீதியில் நட்டமடைந்துள்ளது. அதேநேரம் 1987ல் இ. போ. சபை அடைந்த நட்டம் 79 கோடியே 60 லட்சம் ரூபாவாகும். 1988ம் ஆண்டுக்கான அதன் நட்ட விபரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கியதால்தான், நட்டங்கள் ஏற்பட்டன எனக் கட்டாய ஊகிப்புக்கு இடம் கொடுக்க முயன்றாலும் கடந்த காலங்களில் இ. போ. ச.வும், புகையிரதப் பகுதியும் வழங்கிய சேவைகள் அதற்கு மறுதலையாக உள்ளன. இவ்விரு போக்குவரத்து அமைப்புக்களாலும் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட சேவை அளவுகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளிலிருந்து, இவ்விரு போக்குவரத்து அமைப்புக்களும் தொழிற்பட கிலோமீற்றர் அளவுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளன. மேலும் பிரயாணம்செய்த பயணிகள் கிலோ மீட்டர் அளவுகளும் தொடர்ச்சியாகக் குறைந்துள்ளன.

''இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளினால் நாளொன்றுக்குத் தொழிற்படுத்தப்பட்ட பஸ்களின் எண்ணிக்கை 1987ம் ஆண்டின் 4,676 உடன் ஒப்பிடுகையில் 1988ல் 4,421ஆகக் குறைந்தது. இவ்வீழ்ச்சிக்கு உள்நாட்டுக் குழப்பங்களே பெருமளவு காரணமாகும். வடபிரதேசம் தவிர்ந்த அனைத்துப் பிரதேசங்களிலும் தொழிற்பாடுகளில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. அத்துடன் மேற்கு, வடமத்தி, வடமேற்கு, ஊவா பிரதேசங்களின் பணிகளும் குழப்பங்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன''.

''கடந்த ஆண்டு புகையிரதப் பகுதியின் நடவடிக்கைகள் மேலும் வீழ்ச்சியடைந்ததற்கு வடக்கு, கிழக்குப் பாதைகளின் அட்டவணையிடப்பட்ட பணிகள் இடைநிறுத்தப்பட்டமையும், மற்றைய பாதைகளின் அட்டவணையிட்ட பணிகளில் ஏற்பட்ட இடையூறுகளும் பெருமளவுக்குக் காரணமாகும்'' என மத்திய வங்கி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இப்பின்னடைவுகள் காணப்பட்டபோதும் இ. போ. சபையும், இலங்கைப் புகையிரதப் பகுதியும் அவற்றின் மூலதன இருப்புக்களை முன்னேற்றப் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தன. இ.போ.ச. பழுதடைந்த மற்றும் பழைய பஸ்களை அகற்றும் பொருட்டு 1988ல் 320 பஸ்களைப் புதிதாகக் கொள்வனவு செய்தது. புகையிரதப் பகுதி ரூமேனியாவிலிருந்து 25 கொள்கலன் எந்திகளையும், 20 வலு புகையிரத வண்டிகளையும், 133 பயணிகள் பெட்டிகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்திருந்தது.

அதேநேரம் போக்குவரத்துத் துறையில் தனியார் துறையின் பங்கு 1988ல் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. பஸ்களினதும், உதிரிப்பாகங்களினதும் உயர்ந்த இறக்குமதிச் செலவுகளும். இலாபத் தன்மை குறைவுமே இதற்குப் பெருமளவு காரணமென அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மெய்வல்லுனர் போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்ட கோட்டக்கல்வி பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டி ஜூன்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் நடைபெறும் உன்று யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள உடற் கல்விஅதிகாரி திரு. சு.அருணகிரிராசா தெரிவித்தார்.

அரியாலையில்

## வலைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், நடாத்தும் 'நொக்கவுட்' முறையிலான பெண்கள் வலைபந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகிறது.

மேற்படி கழகத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ள இப் போட்டியில், யாழ். மாவட்டத்தின் சகல பாகங்களிலுமிருந்து விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவிருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)

உதைபந்தாட்டம்

## அரை இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளின் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் அரை இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இப்போட்டியின் முதல்ஆட்டத்தில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுத் தெரிவுக் கோஷ்டியை எதிர்த்து வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுத் தெரிவுக் கோஷ்டியும்மோதும்.

2-வது ஆட்டத்தில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுத் தெரிவுக் கோஷ்டியை எதிர்த்து தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுத் தெரிவுக் கோஷ்டியும் மோதும்.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் கோஷ்டிகள் 12-ம் திகதி பிற்பகல் மேற்படி மைதானத்தில் இறுதி ஆட்டத்தில் மோதும். (வி)

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
20th Century Presents
VAN RYANS
EXPRESS
(C/scope)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்–பிரபு
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

# மினி பஸ்களிலும் 'டிக்கட்' வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மினி பஸ்களிலும் இனிமேல் பிரயாணச்சீட்டு வழங்கப்படும்.

மேலதிகமான முறையில் வாசல்களிலோ, கூடாரத்திலோ பிரயாணிகளை ஏற்றி வருவது தடுக்கப்பட்டுள்ளது.

நாளாந்த சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் யாழ்.நகர பஸ் நிலையத்தில் தற்போது போன்று ஒரே இடத்தில் தரித்துநிற்கமுடியாது. சேவையில் ஈடுபடும் ஒவ்வோர் பாதைக்கும் உரியவை மட்டும் அந்தந்த தரிப்பு நிலையங்களில் நிறுத்திவைக்கமுடியும். ஏனைய மினி பஸ்கள் நகரத்தில் சற்றுத் தள்ளியிருக்கும் வெளியான இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் நேரசூசிகைக்கமைவாக மினி பஸ்களும் சேவையாற்றவேண்டும். முன்னர் போல ஒன்றையொன்று துரத்துகின்ற நிலைமை இதனால் தவிர்க்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகோற்சவம்

(சுழிபுரம்)

வழக்கம்பரை மகா முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று வியாழக்கிமமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17ம் திகதிதேர்த் திருவிழாவும், 18ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 20ம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுறும்.

## மின்சாரத்திற்கு சிறுவன் பலி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 11ம் வட்டாரத்திலுள்ள பலசரக்கு கடையொன்றில் பணியாற்றிவந்த சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கி மரணமானான்.

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த கு. யோகேஸ்வரன் (10 வயது) சிறுவனே இவ்வாறு மரணமானார்.

## பனம்பொருள் உணவுவகை கைநூல்

(சாவகச்சேரி)

பனம் பொருட்களிலிருந்து தயாரிக்கக்கூடிய உணவுப் பண்டங்கள் பற்றிய விளக்கக் கைநூல் ஒன்றினை பனை அபிவிருத்திச்சபை வெளியிட்டுள்ளது.

இந் நாலில் இருபத்திமூன்று வகையான உணவுப்பொருட்கள் பற்றிய செய்முறைகள் மிக விபரமாகத் தரப்பட்டுள்ளன,

## பொதுமக்கள் பாதிப்பு

(சுன்னாகம்)

பருத்தித்துறை பஸ்சாலையிலிருந்து மூளாய்வரை சேவையிலீடுபட்டு வந்த 773ஆம் இலக்கப்பாதை ஊடாகச் செல்லும் பஸ் கடந்த பல மாதங்களாக சேவையில் ஈடுபடாததால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பஸ் வண்டி சேவையிலில்லாததால் காங்கேசன்துறை சீமேந்துத்தொழிற்சாலை ஊழியர்கள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளர்கள் ஆகியோர் பெரிதும் சிரமப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

## முகாம் மூடப்பட்டது

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் இயங்கி வந்த அமைதி படை முகாம் மூடப்பட்டது. சுன்னாகம் மாசியப்பிட்டி வீதியில் இந்த முகாம் கடந்த பல மாதங்களாக இயங்கி வந்தது.

# முறைசாராக்கல்விப் பிரிவின் மத்திய நிலையமாகத் தெரிவு

(சுன்னாகம்)

சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவின் மத்திய நிலையமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. யாழ். கல்வித திணைக்களத்தின் முறைசாராக் கல்விப்பிரிவு இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்லூரியில் போதிய அளவு விவசாயம் செய்வதற்கான காணி வசதி இருப்பதும், விவசாய பயிற்சிநெறிக்கான பயிற்சியில் அதிக அளவில் மாணவர்கள் இப்பகுதிலிருந்து பங்குபற்றுவதும் மத்திய நிலையமாகத் தெரிந்தெடுப்பதற்கான காரணமாக அறியப்படுகிறது.

இக்கல்லூரியில் விஞ்ஞான அடிப்படையிலான விவசாயப் பயிற்சி நெறியில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள்பங்குபற்றும்பயிற்சிவகுப்பு ஒன்றும் தற்போது நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளுக்கிடையிலான

# நுண்கலைப் போட்டிகள் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அனைத்திலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நடன, நாடக, நாட்டிய நாடகப் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளின் முதற் கட்டமாக கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான போட்டி இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னரும், கோட்டக்கல்வி பாடசாலைகளுக்கிடையிலான போட்டி இம்மாதம் 22ம் திகதிக்கு முன்னரும் நடைபெறவுள்ளது.

கோட்டக்கல்வி மட்டத்தில் வெற்றிபெற்ற பாடசாலைகள் இம்மாதம் 29ம் திகதி மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகள் மேற்குறிப்பிட்ட திகதியில் யாழ். இந்துமகளிர் கல்லூரில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் இப் போட்டிகள் சம்பந்தமாக அவ்வப்பகுதி கோட்டக் கல்வி அலுவலகங்களுடன்தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# விளையாட்டில் மாணவருக்கு ஊக்கமளிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

,'விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களிடையே நல்ல பழக்க வழக்கங்களையும், குணம்சங்களையும் ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன'' என்று கோட்டக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தெரிவித்தார்.

வண்ணை. வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. கதிர். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் திரு. சு. சிவநாயகமூர்த்தி மேலும்பேசுகையில் கூறியதாவது:

''எந்தப் பிரச்னைகள் வந்தாலும் அவற்றை இலகுவான முறையில்தீர்ப்பதற்கும், எதையும் தாங்கும் ஆற்றலையும் இந்த விளையாட்டுக்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே விளையாட்டுத் துறையில் மாணவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் தலையாய கடமையாகும்'' என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக கொத்தணி அதிபர் திரு. ஆ. பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர் திரு. க. பினாகபாணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சம்பந்தர் இல்லம் முதலாம் இடத்தையும், அப்பர் இல்லம் இரண்டாம்இடத்தையும், ஆரூரர் இல்லம் மூன்றாம் இடத்தையும்பெற்றுச்கொண்டன.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. ம. கணபதிப்பிள்ளை நன்றி தெரிவித்தார்.

தென்மராட்சியில்

# நாய்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றுவதற்கு ஏற்பாடு

(மட்டுவில்)

தென்மராட்சியில் நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி ஏற்றும் பணி நடைபெற்று வருகிறது தினமும் காலை 9 மணி முதல் 12 மணி வரை தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.

தென்மராட்சி நாய் வளர்ப்பாளர்கள் அக்கறை கொண்டு தமது நாய்களுக்கு தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி மக்களின் வசதிக்காக கீழ்க்காணும் இடங்களில் இந்த விசர் நாய் தடுப்பு ஊசி போடும் பணி பின் குறிப்பிடப்படும் திகதிகளில் நடைபெறும்.

9ம் திகதி கைதடி மேற்கு சன சமூக நிலையத்தில் போடப்படும். இம்மாதம் 12ம் திகதி கைதடி கிழக்கு கிராம சபையிலும் சங்கத்தானை இத்தியடி சன சமூக நிலையத்திலும், 13ம் திகதி நாவற்குழி சன சமூக நிலையத்திலும், சங்கத்தானை கந்தசாமி கோவிலடியிலும் 15ம் திகதி மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியிலும், நுணாவில் மேற்கு பாரதி சன சமூக நிலையத்திலும் 16ம் திகதி தச்சன்தோப்பு கிராம சபையிலும் தடுப்பு ஊசி போடப்படும்.

கொடிகாமம், வரணி, மிருசுவில், எழுதுமட்டுவாள் பகுதிகளுக்கும் தடுப்பு ஊசிபோடும் பணி விஸ்தரிக்கப்படவுள்ளதாக சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள்

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''கடந்த வருடம் 800க்கும் மேற்பட்டோர் கொலைசெய்யப்பட்டனர். 500க்கும் மேற்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன.''

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டிருக்கும் நாற்பத்திநான்கு பக்கங்கள் கொண்ட அதன் ஆகப்பிந்திய [மே-1989) அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது. அந்த அறுக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலன ஆட்கொணர்வு மனுக்கள் தென்பகுதியில் இலங்கை பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டதாகும்.

கடந்த ஜனவரி மாதம் அவசரகால நிலைமை நீக்கப்பட்டபோது சம்பந்தப்பட்டர்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே பெரும்பாலனோர் விடுவிக்கப்பட்டனர்.

நாட்டின் தென்பகுதியில் ஜனதா விமுக்திப்பெரமுன, தேசப்பிரேமி ஜனதா வியாபாரய போன்ற இயக்கத்தினர் 800க்கும் மேற்பட்ட கொலைகளைச்செய்ததாக கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''அரசாங்க உத்தியோகங்கள், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் அங்கத்தவர்கள் ஆகியோரும் கொலை செய்யப்பட்டர்களில் அடங்குவர்.

''புனர்வாழ்வு புனர்நிர்மானத்துறை அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலகா, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி ஆகியவற்றின் தலைவரான திரு. விஜய குமாரணதுங்க ஆகியோர் கொலை செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர்கள்.

மாகாணசபைத் தேர்தல்களில் பங்குபற்றிய பின்னர் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோஷலிசமுன்னணி ஆகியவற்றின் அங்கத்தவர்கள் பலரும் கொல்லப்பட்டனர்.''

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

### சுகாதார சேவை ஊழியர்

## இரண்டு வருட சம்பளத்தை கடனகப் பெறுவர்

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக் களங்கள் பலவற்றில் ஊழியர்களுக்கு வழங்கப்படவிருந்த இரண்டு வருட சம்பளக் கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் யாழ்: பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தமது ஊழியர்களுக்கு இக்கடனை வழங்க முன்வந்துள்ளது,

மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள ஊழியர்களுக்கே இக்கடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

---

## மினி பஸ்களின் நடமாட்டம் யாழ். நகரில் குறைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தின் சுற்றுடலில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருக்கும் மினிபஸ்களின் தொகை நேற்று குறைவாகக் காணப்பட்டன.

குறித்த நேரத்தில் குறித்த பாதைக்குச் செல்கின்ற மினி பஸ் தவிர ஏனைய மினிபஸ்களை நகரின் பஸ்நிலையத்தில் நிறுத்திவைப்பதில்லை என்று மினிபஸ் சங்கத்தினர் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமையவே யாழ்நகர பஸ் நிலையத்தில் மினிபஸ்களின் தொகை குறைவாகக்காணப்பட்டன.

---

## புதூரில் புதிய முகாம்

(ஒட்டுசுட்டான்)

புதூர் நாக தம்பிரான் கோவிலுக்கு அருகாமையில் இந்திய அமைதிப்படையினர் முகாமிட்டுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் நடைபெறவுள்ளது.

---

## தற்காலிக வீதித் தடைகள்: குறுக்குப் பாதையூடாகச் சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் கட்டைப்பிராயிலும், பலாலி வீதியில் திருநெல்வேலியிலும், காங்கேசன்துறை வீதியில் கொக்குவிலும் பாதைகள் நேற்று தடைசெய்யப்பட்டிருந்தன.

இதனல் இவ்விடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் மேற்படி இடங்களுக்கருகே உள்ள குறுக்குப் பாதைகளினூடாக தமது பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டன.

இதேவேளை அச்சுவேலிக்கு செல்லும் பஸ்கள், மினிபஸ்கள் என்பன நேற்று மீண்டும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டன.

---

### ராஜீவிடமிருந்து]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டபோதிலும் அதிகாரபூர்வமான பதில் எதுவும் இந்திய அரசிடமிந்து கிடைக்கவில்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் இத் தகவல்களை தெரிவித்த அமைச்சர்! பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:

''படையை விலக்கிக் கொள்ளுமாறு முன்னர் நாங்கள் கேட்டபோதெல்லாம் படைகள் விரைவில் போகப் போவதாகவே இந்தியா கூறியது. தம்மைக் கலந்தாலோசித்தபின்பே கேட்கவேண்டும் என்று முன்னர் கேட்கவில்லை.

''இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தியப்படை வந்தது. இலங்கை கேட்டால் வெளியேறும் என்றே இந்தியா முன்னர் தெரிவித்தது. இந்தியா வார்த்தை தவறுது என்றே எதிர்பார்க்கிறோம்.

''இந்த விடயத்தில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நம்பிக்கைக்குப் பாதகமான முறையில் நடந்து கொள்ளமாட்டார். அவர் நமது கூற்றுக்கு மதிப்பளிப்பார் என்றே நம்புகிறேன்.

''அமைதிப்படையை வாபஸ் பெறுவதற்கான தமது விருப்பத்தை இந்தியா ஏற்கனவே தெரிவித்துவிட்டது. இதற்கான நடைமுறை ஒழுங்குகள் பேசித் திர்க்கப்படும்.

''எந்த ஒரு தரப்பினரின் வற்புறுத்தலின் பேரிலும் ஜனதிபதி அமைதிப்படையை திருப்பி அழைக்கும்படி இந்தியாவைக்கேட்கவில்லை. நடந்து முடிந்த தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாகவே ஜனதிபதி இக்கோரிக்கையை விடுத்துள்ளார்,

இந்தியா தனது படையைத் திரும்ப அழைக்காதுவிட்டால் இலங்கை என்ன செய்யும் என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு ''நாங்கள் கேட்டால் அவர்கள் போகவேண்டியது தான்'' என்று அமைச்சர் பதிலளித்தார்.

எவ்வளவு விரைவாக இங்கு வந்தார்களோ அதே வேகத்தில் போகவும் அவர்களால் முடியும் என்று அமைச்சர் அங்கு வலியுறுத்தினர்.

---

## தொழிலுக்குச் சென்றவர் தாக்கப்பட்டு மரணம்

(கிளிநொச்சி)

அடிகாயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட புளியம்பொக்கணை வாசியான இராமலிங்கம், சின்னத்தம்பி (வயது 30) மரணமானர்.

மீன்பிடித் தொழிலுக்குச் சென்றபோது இவர் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மரணம் தொடர்பான மரணவிசாரணையைகிளிநொச்சிப் பதில் நீதவான் ஆ. அருள்நாயகம் நடத்தினர். பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி கே. சிவகுமார் நடத்தினர். சாட்சிகளைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கோபாலகிருஷ்ணன், தங்கவேலு ஆகியோர் ஆஜர் செய்தனர்.

---

## வீரப்பன் நூல் நாளை வெளியீடு

[கொழும்புத்துறை]

மலேசியாவைச் சேர்ந்த உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தலைவர் திரு. ந. இ. வீரப்பன் மூன்று நாடுகளுக்கு விஜயம் செய்த பயணக் கட்டுரைகள் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழக யாழ். கிளையினல் நாளை சனிக்கிழமை காலை யாழ். வேம்படி மகளிர் கல்லூரிமண்டபத்தில் யாழ். கிளைத்தலைவர் சட்டத்தரணி திரு. பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## லொறி விபத்தில் இளைஞர் பலி

[யாழ்ப்பாணம்]

லொறி விபத்தில் படுகாயமடைந்து, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை மரணமானர்.

மாங்குளத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் தேவகுமார் [வயது 28] என்பவரே மரணமானவராவார்.

மாங்குளம்-கண்டி வீதியில் சைக்கிளில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்திற்குள்ளான அந்த இளைஞர் முதலில் மாங்குளம் ஆஸ்பத்திரியிலும் பின்னர் யாழ். பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டார்.

மரண விசாரணையின் பின் சடலம் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. [கு]

---

### மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பமாவட்டத்தில் 33 ஆயிரம் பேர் இதுவரை 4 ஆயிரம் ரூபா நிவாரணப் பணத்தைப் பெறுமல் உள்ளனர் என்றும் கூறிய அமைச்சர், அவர்களுக்கு அப்பணம் உடன் வழங்கப்படவேண்டும் எனப் பணிப்புரை வழங்கினர்.

பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் ... தங்களைப் பொருத்த உதவிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினர்.

---

### எம். ஸி.க்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''தீண்டாமை, சாதி ஒழிப்பு நடவடிக்கைகளில் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. சமுதாய அநீதிகளை ஒழிக்க, அவர் கட்சி பேதமின்றிச் செய்த சேவைகள் பாராட்டத்தக்கவை. அன்னரின் மறைவு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குப் பேரிழப்பைத் தருவதாக அமைவதோடு, ஒரு பெரிய இடைவெளியையும் ஏற்படுத்தியுள்ளது'' என்றும் அவர் சொன்னர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. கே. பி. ரத்தாயக்கா தமிழில் பேசுகையில்; ''சிங்கள-தமிழ் மக்களிடையே இன்று பரவிவிட்டிருக்கும் சாதி, மத, இன, மொழிப் பேதங்கள், காலஞ்சென்ற எம். ஸி. சுப்பிரமணியத்திடம் இருக்கவில்லை. நாம் அனைவரும் இலங்கையர் என்றே அவர் எதையும் சிந்தித்தார். இன்றுள்ள கூடுதலான அரசியல்வாதிகள் சாதி, மத, இன, மொழி உணர்வுகளைத் தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியதைப்போல அன்று அவர் யோசித்துச் செயற்படவில்லை. இன்றிருக்கும் நிலையில் அவர் தொடர்ந்து வாழ்ந்திருப்பாரானல் இன, மத, மொழிப் பிரச்னைகளைத் தீர்க்க அவர் பெரிய சேவைகளைச் செய்திருப்பார்'' என்று தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜனுப் அஸ்வர் பேசுகையில்; ''வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற வேறுபாடு இன்றி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாக்குறுதிக்கிணங்க அமரர் சுப்பிரமணியம் முஸ்லிம்களுக்குச் செய்த சேவைகளை நாம் மறந்துவிடமுடியாது. சாதி இரண்டொழிய வேறில்லை என்ற உணர்வுடன் சாதிகளுக்கிடையே சமஅந்தஸ்தை உண்டாக்க அவர் மேற்கொண்ட போராட்டங்களையும் நடவடிக்கைகளும் மறக்கக்கூடியதல்ல'' என்று தெரிவித்தார்.

### அழகு தமிழில் பேசிய ரத்னயக்கா

காலஞ்சென்ற அமரர் எம். ஸி. சுப்பிரமணியத்தின் மறைவினையொட்டி அனுதாபம் தெரிவிக்கும் பிரேரனை மீது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. கே. பி. ரத்னயக்கா அழகு தமிழிலே தனது உரையை ஆற்றினர். சுமார் 15 நிமிடங்கள் எதுவித குறிப்புகளுமின்றிப்பேசிய இவரது பேச்சை திரு. தில்லையநாதன், ஜனுப் அஸ்வர் ஆகியோர் தமது உரைகளின் போது பாராட்டினர்.

---


## மரண அறிவித்தல்

### திருமதி சிவசம்பு - சேதுப்பிள்ளை
(நயினாதிவு)

நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா அமரர் ஆறுமுகம் சிவசம்பு அவர்களின் பாரியார் சேதுப்பிள்ளை அவர்கள் 07-06-89 புதன்கிழமை சிவபதமடைந்தார். இவர் பாக்கியலெட்சுமி, நடராசா (பத்திரிகை விற்பனை நிலையம் யாழ்ப்பாணம்), பரமசாமி (வர்த்தகர் தர்சினி ஸ்ரோர்பெரிய கடை யாழ்ப்பாணம்), பத்மநாதன் (அன் பீல்ட் ஸ்ரேட் டிக்கோயா), பழனிவேலு (பிரபல வர்த்தகர் பெரிய கடை யாழ்ப்பாணம்), குணரெத்தினம் (விளையாட்டுத்துறை அதிகாரி மாவட்ட அமைச்சு) சோதீஸ்வரி ஆகியோரின் தயாரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, மாசிலாமணி, லீலாவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி, ஜெயலெட்சுமி, சிவஞானரெத்தினம் (ஆசிரியை கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், காசிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் அன்னம்மா, காலஞ்சென்ற வயிரிப்பிள்ளை, சதாசிவம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமைக்கிரிகைகள் 10-6-89 சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தகவல்:
ஆ. சி. நடராசாவும், சகோதரர்களும்.

(சி-2813)



இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/10036/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org